**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்**
**முன்னிலை. திரு.C.ஜெயப்பிரகாஷ், M.Com., M.L..,**
**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்**
**2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ஆம் நாள் வியாழக்கிழமை**
**2057 திருவள்ளுவர் ஆண்டு பராபவ வருடம் சித்திரை மாதம் 03ம் நாள்**
**E.P.No.41/2015**
**in**
**I.A.No.162/2022**
**in**
**O.S.No.30/2008**

1. ஆண்டிவேல்செட்டியார் (இறப்பு)

2. பாப்பாத்தி (இறப்பு)

3. காளீஸ்வரி

4. ரெங்கநாயகி

5. பரமேஸ்வரி

6. தனலெட்சுமி

7. பஞ்சவர்ணம்

8. அன்னபூரணி ... மனுதாரர்கள்/
5 முதல் 10 எதிர்மனுதாரர்கள்
5 முதல் 10 பிரதிவாதிகள்

/எதிராக/

1. முருகேசன்

2. வள்ளியம்மாள்

3. சரவணா

4. காளியம்மாள்(இறப்பு) ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

5. பெருமாள் (Exonerated)

6. சக்திவேல் (Exonerated) ... 3, 4 பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 08.04.2025ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 27.06.2025ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 03.03.2026ம்தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் / 5 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு.K.முருகேசன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3

எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு.L.கதிரவன் அவர்கள் முன்னிலையாகியும், 4ம் எதிர்மனுதாரர்/4ம் வாதி கடந்த 22.02.2026ம் தேதியில் இறந்துள்ள நிலையிலும், காளியம்மாளின் வாரிசுகள் ஏற்கனவே மனுவில் தரப்பினர்களாக உள்ளதாலும், 5, 6 எதிர்மனுதாரர்கள் இம்மனு நடவடிக்கையில் இருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ள (Exonerated) நிலையிலும், மனு, எதிர்மனுஉரை, வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகள் கேட்கப்பட்டும், நாளது வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:

**உத்தரவு**

**1.** தீர்ப்பாணையில் கண்ட மனு சொத்துக்களில் மனுதாரர்கள்/ 5 முதல் 10 எதிர்மனுதாரர்கள்/5 முதல் 10 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட மனு சொத்துக்களில் மனுதாரர்கள்/5 முதல் 10 பிரதிவாதிகளுக்கு நீதிமன்ற ஆணையரால் ஒதுக்கப்பட்ட A அயிட்ட சொத்துக்களை நீதிமன்ற முதுநிலை கட்டளைதாரர் வழியாக சொத்தின் சுவாதீனம் மனுதாரர்கள்/5 முதல் 10 பிரதிவாதிகளுக்கு கொடுக்க வேண்டும் என்று உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 21 விதி 36 ன் கீழாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

**2. மனு மற்றும் பிரமாணப்பத்திரிக்கையின் சுருக்கம்** :

எதிர்மனுதாரர்கள் வாதிகளாக இருந்து மனுதாரர்கள் மீதும், 3, 4 பிரதிவாதிகள் மீதும் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி அசல் வழக்கு எண்.30/2008ன் படி என்ற வழக்கினை பழனி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, பிறகு திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றத்தில் குறையுற்ற வாதிகள் மேல்முறையீடு A.S.No.46/2011 என்ற வழக்கு தாக்கல் செய்து, மேல்முறையீடானது கடந்த 07.02.2014ஆம் தேதி அனுமதிக்கப்பட்டும், பின்பு குறையுற்ற 1, 2 பிரதிவாதிகள் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் S.A.No.406/2014 என்ற எண்ணில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மேல்முறையீடானது கடந்த 26.07.2018ஆம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. பின்னர் இந்நீதிமன்றத்தில் இ.ம.எண்.162/2022ன் பேரில் இறுதிநிலை தீர்ப்பாணை மனு தாக்கல் செய்யப்பட்டு,

அதில் கடந்த 17.11.2023ம் தேதியில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிறைவேற்று மனு சொத்துக்களை நீதிமன்ற முதுநிலை கட்டளைதாரர் வழியாக மனுதாரர்கள் வசம் சுவாதீனம் ஒப்படைக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 1ஆம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 2 முதல் 4 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்மனு உரை சுருக்கம்** :

மனு சொத்துக்களும், நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் உள்ள 'பி' லக்க சொத்துக்களும் உபய தரப்பினர்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். மனுதாரர்கள் மனு சொத்துக்களையும் மற்ற சொத்துக்களையும் இந்த மனுவின் பெருமாள், சக்திவேல் ஆகியோர்களுக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டனர். அதன் மீது இந்த எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் பரிகாரம் கோரியதன்படி மனுதாரர்கள் பெருமாள், சக்திவேல் ஆகியோர்களுக்கு கிரையம் செய்து கொடுத்தது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என நீதிமன்றத்தால் விளம்புகை செய்யப்பட்டுள்ளது. அதனை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை உறுதி செய்து தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் தனக்கு ஒதுக்கப்பட்ட 'பி' அயிட்ட சொத்துக்களை பொறுத்து தன் வசம் சுவாதீனம் ஒப்படைக்கும்படி நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்து, இ.பி.எண்.13/2025ல் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது. மனுதாரர்கள், பெருமாள், சக்திவேல் ஆகியோருடன் வஞ்சக கூட்டு சேர்ந்து, 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த மனுவை காலம் தாழ்த்த வேண்டும் என்ற எண்ணத்தில் தாவா மனுவை தாக்கல் செய்துள்ளனர். மேலும் மனுதாரர்கள் பெருமாள், சக்திவேல் ஆகியோர்களுக்கு கிரையம் செய்து கொடுத்த கிரையம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என நீதிமன்றத்தால் விளம்புகை செய்த பின்னிட்டும், தாவா மனுவில் முதல் இன சொத்தை பொறுத்து ஏற்கனவே கிரையம் செய்து கொடுத்துவிட்டதால் அதனை பொறுத்து பரிகாரம் கோரவில்லை என கூறியிருப்பது சட்டப்படி தவறு. மனுதாரர்கள் எழுதிக்கொடுத்த கிரையம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என நீதிமன்றத்தால் விளம்புகை செய்யப்பட்டுள்ள நிலையில், பெருமாள், சக்திவேல் ஆகியோர்களுக்கு தாவா சொத்தில்

எவ்வித உரிமையும் இல்லை. அவர்கள் தாவா மனுவில் அவசியமற்ற தரப்பினர்கள் ஆவார்கள். மனுதாரர்களின் மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர்களின் மனுவை எதிர்மனுதாரர்களின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனுவை அனுமதிக்கவேண்டுமா? அல்லது வேண்டாமா? என்பதே பிரச்சனையாகும்.

**5. பிரச்சனைக்கான தீர்வு :**

**5.1.** வழக்காவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது. வாதிகள், பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.30/2008 வழக்கானது பழனி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, A.S.No.46/2011 என்ற வழக்கில் கடந்த 07.02.2014ஆம் தேதி தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பாணையின் பேரில் இறுதிநிலை தீர்ப்பாணை வழங்கக்கோரி இ.ம.எண்.162/2022 என்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்ட மனுவானது கடந்த 17.11.2023ஆம் தேதி அனுமதிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பித்துள்ளது.

1. **இந்த மனு அனுமதிக்கப்பட்டு, நீ.ம.சா.ஆ.2 முதல் நீ.ம.சா.ஆ.4 வரையான வரைபடங்களில் 'B' பாகமாக குறிப்பிடப்பட்டுள்ள பகுதியை மனுதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்தும், 'A' என குறிப்பிடப்பட்டுள்ள பகுதியை எதிர்மனுதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்தும் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பித்து உத்தரவிடப்படுகிறது.**
2. **நீ.ம.சா.ஆ.1 முதல் நீ.ம.சா.ஆ.4 வரையான ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடங்கள் இந்த இறுதிநிலை தீர்ப்பாணையின் ஒரு அங்கமாக பாவிக்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.**
3. **மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் அவர்களுக்கு பிரிந்த சொத்துக்களை பொறுத்து பட்டா மாறுதல் மற்றும் வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்து கொள்ளலாம் என்று உத்தரவிடப்படுகிறது.**
4. **செலவுத்தொகை பற்றிய உத்தரவு எதுவும் இல்லை.**

**5.2.** இந்நிலையில், திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றத்தில் A.S.No.46/2011 என்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு வழக்கு கடந்த 07.02.2014ஆம் தேதி மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டுள்ளது. பின்னிட்டு மேற்படி மேல்முறையீட்டின் பேரில், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள S.A.(MD) No.406/2014 வழக்கானது கடந்த 26.07.2018ம் தேதி மேல்முறையீட்டை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவின் பேரில் நாளது வரை எவ்விதமான மேல்முறையீடும் இல்லை என்பது வழக்கு கோப்பினை பரிசீலனை செய்கையில் புலனாகிறது. வாதிகள் தாக்கல் செய்திருந்த இ.ம.எண்.162/2022 என்ற மனுவில் கடந்த 17.11.2023ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தால் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணையின் சரத்துக்களின் பேரில் நாளது வரை எந்த ஒரு மேல்முறையீடும் இல்லை என்பது வழக்கு கோப்பினை பரிசீலனை செய்கையில் புலனாகிறது. மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணையில் நீ.ம.சா.ஆ.2 முதல் நீ.ம.சா.ஆ.4 வரையிலான வரைபடங்களில் 'B' பாகமாக குறிப்பிடப்பட்டுள்ள பகுதியை வாதிகளுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், நீ.ம.சா.ஆ.2 முதல் நீ.ம.சா.ஆ.4 வரையான வரைபடங்களில் A' என குறிப்பிடப்பட்டுள்ள பகுதியை பிரதிவாதிகளுக்கு ஒதுக்க வேண்டும் என்று இறுதிநிலை தீர்ப்பாணையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள A.S.No.46/2011 என்ற வழக்கில் கடந்த 07.02.2014ம் தேதி பிறப்பித்த உத்தரவில் 2ம் பிரதிவாதி தாவா 1 லக்க சொத்தை பொறுத்து 3, 4 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த கிரையம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை பரிகாரம் வழங்கியுள்ள நிலையில், மேற்படி A.S.No.46/2011 என்ற வழக்கில் பிறப்பித்த உத்தரவை S.A(MD) No.406/2014 என்ற வழக்கிலும் மாண்புமிகு உயர்நீதிமன்றம் ஊர்ஜிதம் செய்துள்ளதால், இம்மனுவில் கண்டுள்ள 5,6 எதிர்மனுதாரர்கள் /3, 4 பிரதிவாதிகளுக்கு மனு சொத்துக்களை பொறுத்து எவ்வித பாத்தியமும் இல்லை. நாளது வரை எந்த ஒரு மேல்முறையீடும் இல்லாத நிலையில், இ.ம.எண்.162/2022 மனுவில் பிறப்பித்துள்ள உத்தரவின் தன்மைப்படி மனு சொத்துக்களை இந்நீதிமன்ற முதுநிலை கட்டளைதாரர் வழியாக

மனுதாரர்கள்/ 5 முதல் 10 பிரதிவாதிகளுக்கு சொத்தின் சுவாதீனம் ஒப்படைக்க உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**6. முடிவில்,**

1. **இம்மனு செலவுதொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**
2. **இ.ம.எண்.162/2022 மனுவான இறுதிநிலை தீர்ப்பாணையில் கண்டுள்ளவாறு மனுச்சொத்தின் சுவாதீனத்தை மனுதாரர்கள் / 5 முதல் 10 பிரதிவாதிகளுக்கு இந்நீதிமன்ற முதுநிலை கட்டளைதாரர் வழியாக மனு சொத்தின் சுவாதீனம் கொடுக்க உத்தரவிடப்படுகிறது. சொத்தின் சுவாதீனம் ஒப்படைக்க வாய்தா 29.04.2026.**
3. **படிமெமோ செலுத்த 3 நாட்கள் காலஅவகாசம் வழங்கப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ம் நாள் அவையறிய திறந்த நீதிமன்றத்தில் உத்தரவு பகரப்பட்டது.

C JAYAPPRAKASH Digitally signed by C JAYAPPRAKASH Date: 2026.04.16 19:07:32 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிய, சான்றாவணங்கள் – இல்லை**

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிய, சான்றாவணங்கள் – இல்லை**

C JAYAPPRAKASH Digitally signed by C JAYAPPRAKASH Date: 2026.04.16 19:07:38 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்**
**முன்னிலை. திரு.C.ஜெயப்பிரகாஷ், M.Com., M.L..,**
**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்**
**2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ஆம் நாள் வியாழக்கிழமை**
**2057 திருவள்ளுவர் ஆண்டு பராபவ வருடம் சித்திரை மாதம் 03ம் நாள்**
**E.P.No.41/2015**
**in**
**I.A.No.162/2022**
**in**
**O.S.No.30/2008**

1. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கேதையுறும்பு கிராமம், பழையபட்டியில் வசிக்கும் பழனிச்சாமி ஆண்டிவேல் செட்டியார் (இறப்பு)

2. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கேதையுறும்பு கிராமம், பழையபட்டியில் வசிக்கும் லேட்.ஆண்டிவேல்செட்டியார் மனைவி இந்து வயது சுமார் 75 உள்ள பாப்பாத்தி (இறப்பு)

3. கர்நாடகா மாநிலம், பெங்களூர், K.P.அக்ரஹாரம் க.எண்.1/1, 12வது மெயின் ரோடு என்ற முகவரியில் வசிக்கும் ஆண்டிவேல் செட்டியார் மகளும், ரெங்கநாதன் மனைவியுமான இந்து வயது சுமார் 61 உள்ள காளீஸ்வரி

4. சென்னை, நஞ்சம்பாக்கம், மாதவரம், காமராஜர் சாலை, க.எண்.4/148ல் வசிக்கும் ஆண்டிவேல் செட்டியார் அவர்கள் மகளும், M.செல்வம் அவர்களின் மனைவியுமான இந்து வயது சுமார் 59 உள்ள ரெங்கநாயகி

5. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கேதையுறும்பு கிராம், ஒட்டன்சத்திரம் – வேடசந்தூர் ரோட்டில் வசிக்கும் ஆண்டிவேல் செட்டியார் மகள் இந்து வயது சுமார் 57 உள்ள பரமேஸ்வரி

6. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கேதையுறும்பு கிராம், ஒட்டன்சத்திரம் – வேடசந்தூர் ரோட்டில் வசிக்கும் ஆண்டிவேல் செட்டியார் மகள் இந்து வயது சுமார் 61 உள்ள தனலெட்சுமி

7. ஈரோடு மாவட்டம், ஈரோடு, V.V.C.R. நகர், 2வது தெரு, க.எண்.59ல் வசிக்கும் ஆண்டிவேல் செட்டியார் மகளும், காளிமுத்து மனைவியுமான இந்து வயதுசுமார் 52 உள்ள பஞ்சவர்ணம்

8. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கேதையுறும்பு கிராம், ஒட்டன்சத்திரம் – வேடசந்தூர் ரோட்டில் வசிக்கும் ஆண்டிவேல் செட்டியார் அவர்கள் மகள் இந்து வயது சுமார் 50 உள்ள அன்னபூரணி

... மனுதாரர்கள்/2, 5 முதல் 10 எதிர்மனுதாரர்கள்
எதிர்மனுதாரர்கள்/ 2, 5 முதல் 10 பிரதிவாதிகள்

/எதிராக/

1. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கேதையுறும்பு கிராமம், பழையபட்டியில் வசிக்கும் லேட்.ஆறுமுகம் செட்டியார் அவர்கள் அவர்கள் மகன் இந்து வயது சுமார் 72 உள்ள முருகேசன்

2. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கேதையுறும்பு கிராமம், பழையபட்டியில் வசித்து வந்து, தற்சமயம் வேடசந்தூர் வட்டம், சிந்துவார்பட்டி கிராமத்தில் வசிக்கும் லேட்.ஆறுமுகம் செட்டியார் மகளும், தாமோதரன் மனைவியுமான இந்து வயது சுமார் 66 உள்ள வள்ளியம்மாள்

3. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கேதையுறும்பு கிராமம், பழையபட்டியில் வசிக்கும் லேட்.ஆறுமுகம்செட்டியார் அவர்கள் மகன் இந்து வயது சுமார் 58 உள்ள சரவணா

4. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கேதையுறும்பு கிராமம், பழையப்பட்டியில் வசிக்கும் லேட்.ஆறுமுகம்செட்டியார் அவர்கள் மகள் இந்து வயது சுமார் 75 உள்ள காளியம்மாள் (இறப்பு) ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

5. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், புலியூர்நத்தம் கிராமம், முத்துநாயக்கன்பட்டி, கதவு எண்.1/180Aல் வசிக்கும் முத்துசெல்லப்பகவுண்டர் மகன் இந்து வயது சுமார் 61 உள்ள பெருமாள் (Exonerated)

6. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், புலியூர்நத்தம் கிராமம், முத்துநாயக்கன்பட்டி, கதவு எண்.4/73ல் வசிக்கும் செல்லமுத்து மகன் இந்து வயது சுமார் 53 உள்ள சக்திவேல் (Exonerated) ... 3, 4 பிரதிவாதிகள்

தீர்ப்பாணையில் கண்ட மனு சொத்துக்களில் மனுதாரர்கள்/ 5 முதல் 10 எதிர்மனுதாரர்கள்/5 முதல் 10 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட மனு சொத்துக்களில் மனுதாரர்கள்/5 முதல் 10 பிரதிவாதிகளுக்கு நீதிமன்ற ஆணையரால் ஒதுக்கப்பட்ட A அயிட்ட சொத்துக்களை நீதிமன்ற முதுநிலை கட்டளைதாரர் வழியாக சொத்தின் சுவாதீனம் மனுதாரர்கள்/5 முதல் 10 பிரதிவாதிகளுக்கு கொடுக்க வேண்டும் என்று உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 21 விதி 36 ன் கீழாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

**மனு தாக்கலான நாள் : 08.04.2025**

**மனு மீதான வில்லை : 20**

இம்மனுவானது கடந்த 08.04.2025ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 27.06.2025ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 03.03.2026ம்தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் / 5 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு.K.முருகேசன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு.L.கதிரவன் அவர்கள் முன்னிலையாகியும், 4ம் எதிர்மனுதாரர்/4ம் வாதி கடந்த 22.02.2026ம் தேதியில் இறந்துள்ள நிலையிலும், காளியம்மாளின் வாரிசுகள் ஏற்கனவே மனுவில் தரப்பினர்களாக உள்ளதாலும், 5, 6 எதிர்மனுதாரர்கள் இம்மனு நடவடிக்கையில் இருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ள (Exonerated) நிலையிலும், மனு, எதிர்மனுஉரை, வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகள் கேட்கப்பட்டும், நாளது வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பின்வரும் கட்டளை மற்றும் உத்தரவாணையை வழங்குகின்றது.

<u>**உத்தரவாணை**</u>

**1.** இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

2. இ.ம.எண்.162/2022 மனுவான இறுதிநிலை தீர்ப்பாணையில் கண்டுள்ளவாறு மனுச்சொத்தின் சுவாதீனத்தை மனுதாரர்கள் / 5 முதல் 10 பிரதிவாதிகளுக்கு இந்நீதிமன்ற முதுநிலை கட்டளைதாரர் வழியாக மனு

சொத்தின் சுவாதீனம் கொடுக்க உத்தரவிடப்படுகிறது. சொத்தின் சுவாதீனம் ஒப்படைக்க வாய்தா 29.04.2026

3. செலவு தொகை இல்லை.

4. படிமெமோ செலுத்த 3 நாட்கள் காலஅவகாசம் வழங்கப்படுகிறது.

**சொத்துவிவரம்**

தீர்ப்பாணையில் கண்ட "அ" அயிட்டம் சொத்து :

1) திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கேதையுறும்பு கிராமம், சர்வே எண்.299/2A ஏர்ஸ் 23–க்கு செண்ட் 0.57 1/2 உள்ள காலியிடத்திற்கு நான்குமால் விபரம் :

| | | |
|---|---|---|
| வடக்கு | – | கந்தசாமிக்கவுண்டர் நிலம் |
| கிழக்கு | – | கேதையுறும்பு – இடையகோட்டை ரோடு |
| தெற்கு | – | பஞ்சாசரம் ஸ்ரீரங்கன் காளியப்பன் செட்டியார் குடியிருப்பு மனைவீடுகள் |
| மேற்கு | – | குப்பணக்கவுண்டர் வகையறா நிலம் |

இதற்குள் செண்ட் 0.57 1/2 உள்ள காலியிடம்

Amended as per in E.A.No.01/2025 allowed on 07.11.2025

2) திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம் கேதையுறும்பு கிராமம், சர்வே எண்.299/2D நிர் 12 1/2 உள்ள காலியிடத்திற்கு நான்குமால் விபரம்:

| | | |
|---|---|---|
| வடக்கு | – | நாச்சிமுத்துசெட்டியார் நிலம் |
| கிழக்கு | – | நாச்சிமுத்துசெட்டியார், கு.ராமகிருஷ்ணன், கு.சுப்பிரமணி கடைகள் |
| தெற்கு | – | ஒட்டன்சத்திரம் – வேடசந்தூர் ரோடு |
| மேற்கு | – | எல்.எஸ்.பழனிச்சாமி கூரைக்கடைகள் 2 |

இதற்குள் செண்ட் 12 1/2 உள்ள காலியிடம் அதில் தற்காலிக சைக்கிள் ஸ்டாண்ட் மற்றும் எஸ்.டி.டி.பூத் அதற்கு கதவு எண்.2/387

3) திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கேதையுறும்பு கிராமம், சர்வே எண்.299/2G ஏர்ஸ் 2 1/2க்கு செண்ட் 6 1/4 உள்ள காலியிடத்திற்கு நான்குமால் விபரம் :

| | | |
|---|---|---|
| வடக்கு | – | நாச்சிமுத்துசெட்டியார் மாடிக்கட்டிடம், கடைகள் மற்றும் விவசாய நிலம் |
| கிழக்கு | – | கேதையுறும்பு – இடையகோட்டை ரோடு |
| தெற்கு | – | ஒட்டன்சத்திரம் – வேடசந்தூர் ரோடு |
| மேற்கு | – | கு.ராமகிருஷ்ணன் கட்டிடம், கு.சுப்பிரமணி கடைகள் |

இதற்குள் சென்ட் 6 1/4 உள்ள இடமும், அதில் கதவு எண்.2/376, 2/385, 2/386 ஆகிய நம்பர்களில் உள்ள ஒரு குடியிருப்பு வீடும், 2 மக்கடைகளும் சேர்ந்து.

மேற்படி 3 அயிட்ட சொத்துக்களிலும், மனுதாரர்களுக்கு நீதிமன்ற ஆணையரால் ஒதுக்கப்பட்ட "ஏ" ஷெட்யூல் சொத்தைப் பொறுத்து மனுதாரர்கள் வசம் சுவாதீனம் ஒப்படைக்க வேண்டியது.

Amended as per in E.A.No.01/2025 allowed on 07.11.2025

DETAIL OF COSTS

| Cost list Details | Petitioner/Defendant Rs. | Respondent/ Plaintiff Rs. |
|---|---|---|
| Stamp on Petition | Rs.20/– | – |
| Vakalath | Rs.10/– | – |
| | Costs list not filed | |

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ம் நாள் என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்படுகிறது.

C JAYAPPRAKASH Digitally signed by C JAYAPPRAKASH Date: 2026.04.16 19:07:46 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்**